RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 187 | ஜூலை.10 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## கேரளாவில் மீண்டும் நிபா வைரஸ் பாதிப்பு: கோவை மக்களுக்கு ஆட்சியர் தரும் 'அலர்ட்' குறிப்புகள்




கோவை: ஜூலை.10-

கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என கோவை மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: 'நிபா வைரஸ் என்பது வைரஸ் கிருமியால் ஏற்படும் ஒரு வகை காய்ச்சல் ஆகும். இது மூளை, இருதயம், ஆகியவற்றை பாதிக்கும். முதன் முதலில் 19981999 ல் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நோய்த் தாக்கம் ஏற்பட்டது. கேரளாவில் 2018ல் கோழிகோடு பகுதியில் பாதிப்பு ஏற்பட்டது. 2019ல் கேரளாவில் எர்ணாகுளம் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டது. தற்போது மீண்டும் இந்நோய் பாதிப்பு கேரளாவில் ஏற்பட்டுள்ளது.

நிபா வைரஸ் நோய் பரவும் விதம்: நிபா வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் ஒரு நோய் ஆகும். இந்நோயை உண்டாக்கும் வைரஸ் பழந்தின்னி வவ்வால்கள் மூலமாக பெருக்கமடைகின்றன. நோய்வாய்ப்பட்ட பழந்தின்னி வவ்வால், பன்றி மற்றும் பாதிக்கப்பட்ட மனிதர்களிடமிருந்து மற்றவர்களுக்கு பரவும் தன்மை கொண்டது. பழந்தின்னி வவ்வால்கள் கடித்த பழங்களை உண்பதன் மூலமாக மனிதர்களுக்கு பரவும் வாய்ப்புள்ளது.

அறிகுறிகள்: நிபா வைரஸ் நோய் மூளைக் காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகளை வெளிப்படுத்தும். கடும் காய்ச்சல், தலைவலி, மயக்கம், சுயநினைவிழத்தல், மனக்குழப்பம், கோமா மற்றும் மரணம் ஏற்படலாம். கிருமி தொற்று ஏற்பட்ட 5 முதல் 15 நாட்களுக்குள் இந்த நோயின் அறிகுறிகள் வெளிப்படும். மேலும் அறிகுறிகள் தென்பட்ட 24 மணிநேரம் முதல் 48 மணி நேரத்திற்குள் தீவிர மயக்க நிலை சுயநினைவு இழத்தல் மற்றும் மனக்குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

கண்டறியும் முறைகள்: காய்ச்சல் மற்றும் மூளை அலர்ஜி நோய்களுக்கான பரிசோதனைகள் செய்ய வேண்டும். சந்தேகிக்கப்பட்டவர்களின் ரத்த மாதிரிகளை பரிசோதித்து கண்டறியலாம்.

சிகிச்சை: நிபா வைரஸ் நோய் தாக்கியவர்களை மருத்துவமனையில் அனுமதித்து தீவிர சிகிச்சை அளிப்பதன் மூலம் குணப்படுத்தலாம்.

நோய் பரவாமல் தடுக்கும் முறை: இந்நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுவதால் பாதிக்கப்பட்ட நபர்களை தனிமை அறையில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பவர்கள் மற்றும் கவனித்துக் கொள்பவர்கள் உரிய பாதுகாப்பு முறைகளான முக கவசம் அணிதல், முறையாக கை கழுவுதல், நோயாளிகள் பயன்படுத்திய பொருட்களை பத்திரமாக அப்புறப்படுத்தி தொற்று நீக்கம் செய்தல் போன்றவற்றை கையாள வேண்டும். காய்கறிகள் மற்றும் பழங்களை நன்றாக தண்ணீரில் கழுவி பயன்படுத்த வேண்டும்.

வவ்வால்கள் கடித்த பழங்களை சாப்பிடக் கூடாது. வீட்டின் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பன்றிகளை குடியிருப்பு பகுதிகளிலிருந்து அகற்ற வேண்டும். நோய்வாய்ப்பட்ட பன்றிகள் காணப்பட்டால் உடனடியாக கால்நடை மருத்துவத் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அல்லது அரசு மருத்துவமனையின் மருத்துவரை அணுகி உரிய ஆலோசனை மற்றும் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்' இவ்வாறு ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## மாங்கனி திருவிழாவை ஒட்டி காரைக்காலில் நாளை உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

புதுச்சேரி: ஜூலை.10-

மாங்கனி திருவிழாவையொட்டி காரைக்காலில் இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புதுவை உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: காரைக்காலில் உள்ள காரைக்கால் அம்மையார் கோயிலில் மாங்கனி திருவிழா கடந்த 8ம் தேதி தொடங்கி வரும் 11ம் தேதி வரை நடக்கிறது. பக்தர்கள் மாம்பழங்களை பொழியும் மங்களகரமான மாங்கனி திருவிழா இன்று (வியாழக்கிழமை) நடைபெற உள்ளது.

துணைநிலை ஆளுநர் ஒப்புதலுடன், காரைக்கால் அம்மையாளர் கோயில் மாங்கனி திருவிழாவை கொண்டாட காரைக்கால் பகுதிக்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படுகிறது. அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் இந்த விடுமுறைக்கு ஈடாக 19ம் தேதி சனிக்கிழமை செயல்படும் என தெரிவித்துள்ளார்.

## திண்டுக்கல் அருகே வந்தேபாரத் ரயிலில் திடீர் புகை: பாதி வழியில் நின்றதால் பரபரப்பு



திண்டுக்கல், ஜூலை.10-

திருநெல்வேலியில் இருந்து நேற்று காலை 6.15 மணிக்கு சென்னையை நோக்கி வந்தேபாரத் ரயில் புறப்பட்டது. காலை 8.45 மணிக்கு திண்டுக்கல் ரயில்நிலையத்தை கடந்து சென்றது. சில கிலோமீட்டர் கடந்த நிலையில் வடமதுரை ரயில்நிலையத்திற்கு முன்பாக வேல்வார்கோட்டை கிராமப்பகுதியில் ரயில் சென்று கொண்டிருந்தபோது இன்ஜினை அடுத்துள்ள பெட்டியில் இருந்து புகை கிளம்பியது. பெட்டி முழுவதும் புகை பரவத்துவங்கிய நிலையில், அங்கிருந்த பயணிகள் அலறியடித்து கூச்சல் இட்டனர். இதைகேட்ட ரயில் ஓட்டுநர் ரயிலை நிறுத்தினார்.

ஆராய்ந்தபோது ரயிலில் இருந்த ஏசி யூனிட்ல் இருந்து புகை கிளம்பியது தெரியவந்தது. இதையடுத்து புகை வந்த பகுதியை ரயில் ஓட்டுநர்கள் தற்காலிகமாக சரிசெய்தனர். மேலும், அந்த பெட்டியில் இருந்த பயணிகள் அருகிலுள் பெட்டிக்கு மாற்றப்பட்டனர். இதனால் 20 நிமிட ங்கள் அந்த ரயில் வேல்வார்கோட்டை பகுதியில் நின்றது. இதுகுறித்து திண்டுக்கல், திருச்சி ரயில் நிலையங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

புகை வருவது நின்றதை யடுத்து வந்தேபாரத் ரயில் 20 நிமிடங்களுக்கு பிறகு அங்கிருந்து மெதுவான வேகத்தில் திருச்சி நோக்கி புறப்பட்டுச்சென்றது. திருச்சி ரயில் நிலையத்தில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வுக்கு பிறகு, அவர்களின் ஒப்புதலின் பேரில் தொடர்ந்து வந்தேபாரத் ரயில் இயக்கப் படவுள்ளது.

## "கோட்சே கூட்டம் பின்னால் மாணவர்கள் செல்லக்கூடாது" திருச்சி கல்லூரி விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு



திருச்சி: ஜூலை.10-

"காந்தி வழி, அம்பேத்கர் வழி, பெரியார் வழி என்று மாணவர்கள் பின்பற்ற வழிகள் உள்ளன. ஆனால், கோட்சே கூட்டம் பின்னால் மாணவர்கள் சென்றுவிடக் கூடாது." என்று திருச்சி ஜமால் கல்லூரி பவளவிழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பவள விழா ஆண்டின் துவக்க நாளான இன்று (ஜூலை 9) குளோபல் ஜமாலியன் பிளாக் என்ற புதிய கட்டிடத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். அவருடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ், கோவி செழியன், எம்பிக்கள் சிவா, சல்மா, நவாஸ் கனி, கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே.காஜா நஜீமுதீன், பொருளாளர் எம்.ஜே.ஜமால் முகமது உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அதைத்தொடர்ந்து மாணவர்களிக்கிடையே முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: நான் முதல்வராக பொறுப்பேற்றதில் இருந்து தொடர்ந்து பயணம் செய்து அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறேன். அதுமட்டுமல்ல, ஆய்வுக்கூட்டம், அரசுப்பணி என தொடர்ந்து பரபரப்பாக இருந்தாலும், உங்களைப் போன்ற இளம் மாணவர்களை சந்திக்கின்றபோது எனக்கு எனர்ஜி வந்துவிடுகிறது. அதிலும் மாணவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய நிகழ்ச்சி என்றால், உடனே ஓகே சொல்லிவிடுவேன். இப்போதுகூட, திருவாரூர் பயணத்திற்கு நடுவில் உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.

இந்த ஜமால் முகமது கல்லூரிக்கு நான் வருவது, இது முதல்முறை கிடையாது. பலமுறை வந்திருக்கிறேன். ஒற்றுமையும், சகோதரத்துவமும் எப்படி வலுப்பட வேண்டும் என்று நாட்டுக்கு வழிகாட்டும் நிறுவனமாக இந்த கல்லூரி இருக்கிறது. இங்கு உங்களுக்குள் உருவாகும் நட்பு எல்லா காலத்துக்கும் தொடர வேண்டும். கல்லூரி நட்பு, முதிய வயது வரை உறுதியாக இருக்க வேண்டும். அது இந்த சமூகத்திலும் எதிரொலிக்க வேண்டும். ஏனென்றால், இந்தக் கல்லூரி ஹாஜி ஜமால் முகமது சாஹிப், ஜனாப் காஜா மியான் ராவுத்தர் ஆகியோரின் நட்பினால் உருவானது.

கல்லூரியை உருவாக்கிய இரண்டு வள்ளல்களும் காந்தி வழியைக் கடைப்பிடித்தவர்கள். காந்தி வழி, அம்பேத்கர் வழி, பெரியார் வழி என்று நமக்கான பல வழிகள் இருக்கின்றன. ஆனால், மாணவர்களாகிய நீங்கள் ஒருபோதும் 'கோட்சே கூட்டத்தின்' வழியில் சென்றுவிடக்கூடாது.

கல்வி நிறுவனத்துக்கும், அங்கே படிக்கின்ற மாணவர்களால் தான் பேரும் புகழும் கிடைக்கும். உயர்ந்த சிந்தனையாளர்களோடு தொலைநோக்குப் பார்வையை செயல்வடிவமாக்கப் போகின்றவர்கள் மாணவர்களான நீங்கள்தான்.

மாணவர்களுக்கு படிப்பு மிகவும் முக்கியம். அதுதான் உங்களின் நிலையான சொத்து. பல்வேறு திறமைகள் கொண்டவர்களாக, தன்னம்பிக்கையும் சமூக அக்கறையும் நிறைந்தவர்களாக மாணவர்கள் வளர வேண்டும். இந்த கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் போல நாமும் வருவோம் என்று உங்கள் மனதில் உருவாகும் நம்பிக்கைதான் இந்த கல்லூரியின் தன்னம்பிக்கை சான்றிதழ்.

உங்களின் முன்னாள் மாணவர்கள் பட்டியலில் பல ஐஏஎஸ்., ஐபிஎஸ் அதிகாரிகள், நீதிபதிகள் கூட இருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாடு கேபினட்டில் இரண்டு அமைச்சர்கள் உங்கள் கல்லூரியில் படித்து உருவான மாண்புமிகுக்குரியவர்கள். ஒருவர் கே.என்.நேரு. மற்றொருவர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம். உங்கள் சீனியர்கள் எங்களுக்கும் அமைச்சரவையில் சீனியர்கள் தான். நாளைக்கு உங்களில் இருந்து சிலர்கூட அந்தப் பட்டியலில் வரலாம். வரவேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கலாம்.

'ஓரணியில் தமிழ்நாடு' நின்றால் தமிழ்நாட்டை யாராலும் வீழ்த்த முடியாது. நான் அரசியல் பேசவில்லை. மாணவர்களுக்கு நிச்சயம் அரசியல் புரிதல் இருக்க வேண்டும் என்று பேசுகிறேன்.

கடந்த கால படிப்பினைகளின் நிகழ்கால வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு எதிர்காலம் வளமாக அமைய வேண்டும். அந்த எதிர்காலம் என்பது நீங்கள்தான். கல்வி நமக்கு எளிதாக கிடைத்து விடவில்லை; நம்முடைய தலைவர்கள் நடத்திய சமூகநீதி போராட்டங்களால் கிடைத்தது. சமூக நீதி போராட்டங்களின் பலன்தான் இன்றைக்கு நாம் பார்க்கின்ற தமிழ்நாடு.

இஸ்லாமிய சகோதரர்களின் அரசியல் உரிமைகளையும் காப்பாற்றும் இயக்கமாக திமுக எந்நாளும் இருக்கும். இது நான் உங்களுக்குத் தரும் உறுதி. கல்விதான் யாராலும் பறிக்க முடியாத ஒரே சொத்து. அதை மாணவர்களுக்கு கொடுப்பதோடு திறன் மேம்பாட்டை வளர்க்கவும், அதற்கேற்ற வசதிகளை வழங்கவும், திராவிட மாடல் அரசு தயாராக இருக்கிறது. எங்களின் கல்வி வளர்ச்சித் திட்டங்களுக்கு ஜமால் முகமது கல்லூரி போன்ற நிறுவனங்களும் துணையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மாணவர் மத்தியில் முதல்வர்: தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது பேச்சுக்கு இடைஇடையே மாணவர்களை உற்சாகப்படுத்துகின்ற சில வார்த்தைகளை பேசினார். அதுவும் ஆங்கில வார்த்தையாக பேசினார். இதைக்கண்டு உற்சாகமடைந்த மாணவர்கள் கைதட்டி, பலத்த கரகோஷம் எழுப்பினர். இதனால் உற்சாகமடைந்த முதல்வர் மேடையில் தனது பேச்சை முடிக்கும் முன்னர் "அனைவருக்கும் நன்றி, என்னை மனதளவில் உங்கள் வயதிலேயே வைத்திருக்க உதவுகின்ற மாணவர்களுக்கு சிறப்பு நன்றி" என்றார்.

## 'உங்களுடன் ஸ்டாலின்' ஊரை ஏமாற்றும் திட்டம்: விளக்கங்களை அடுக்கி அன்புமணி விமர்சனம்

சென்னை: ஜூலை.10-

'உங்களுடன் ஸ்டாலின்' என்ற பெயரில் மக்களை ஏமாற்றுவதை விடுத்து சேவை உரிமைச் சட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முன்வர வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தமிழக மக்களுக்கு அரசின் சேவைகளை வழங்குவதற்காக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் வரும் 15ம் தேதி தொடங்கி டிசம்பர் 14ம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்கு தினமும் வழங்கப்பட வேண்டிய உணவை வழங்காமல் பறித்து வைத்துக் கொண்டு ஐந்தாண்டுக்கு ஒருமுறை வழங்குவது எவ்வளவு பெரிய ஏமாற்று வேலையோ, அதைவிட மோசமான ஏமாற்று வேலை தான் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் ஆகும். இத்திட்டத்தின் பெயரால் மக்களை அரசு ஏமாற்றுவது கண்டிக்கத்தக்கது.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்கள் தமிழ்நாட்டில் வரும் 15ம் தேதி முதல் நடத்தப்படவிருப்பதாகவும், அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை தலைகீழாக மாறப்போவதாகவும் ஊடகங்களில் செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால், உண்மையில் இந்தத் திட்டத்தின் மூலம் தமிழக மக்களுக்கு எந்தவிதமான புதிய திட்டங்களும் செயல்படுத்தப்பட போவதில்லை; யாருக்கும் எந்தப் பயனும் கிடைக்கவும் போவதில்லை.

இத்திட்டத்தின் மூலம் அடுத்த 4 மாதங்களில் நான்கு கட்டங்களாக பத்தாயிரம் முகாம்கள் நடத்தப்படவுள்ளன. அந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும் ,ஊரகப்பகுதிகளில் 15 துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். வழக்கமாக மக்களுக்குத் தேவைப்படும் சாதிச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ்கள், இறப்புச் சான்றிதழ்கள், கலைஞர் கைவினைத் திட்டம், ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி உதவி திட்டம், முதியோர் உதவித் தொகை, பாதாள சாக்கடை இணைப்பு உள்ளிட்டவற்றுக்காகத் தான் இந்த முகாம்களில் பொதுமக்கள் விண்ணப்பிக்க முடியும். இவை வழக்கமாகக் கிடைக்கும் சேவைகள் தான்.

வழக்கமான சேவைகளுடன் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் மாதம் ரூ.1000 பெறுவதற்கான விண்ணப்பமும் இந்த முகாம்களில் பெறப்படும் என்று கூறி எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது தமிழக அரசு. 202526 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயனடையும் குடும்பத் தலைவிகளின் எண்ணிக்கை 1.15 கோடி ஆகும். அவர்களுக்கு மாதம் ரூ.1000 வீதம் நிதி வழங்க வேண்டுமானால், அதற்கு ரூ.13,800 கோடி தேவை.

ஆனால், 202526ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டத்திற்காக ரூ.13,807 கோடி மட்டும் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தேவையை விட வெறும் ரூ.7 கோடி மட்டும் தான் அதிகம். இதைக் கொண்டு 5,833 பேருக்கு மட்டும் தான் கூடுதலாக உரிமைத் தொகை வழங்க முடியும்.

ஆனால், 10,000 மையங்களில் இதற்கான விண்ணப்பங்கள் பெறப்படவுள்ளன. முகாமுக்கு 100 பேர் என வைத்துக் கொண்டாலும் 10 லட்சம் பேருக்கு உரிமைத்தொகை வழங்கப்பட வேண்டும். அதற்கான நிதி அரசால் ஒதுக்கப்படவில்லை. அதனால் தான், ஜூன் 4ஆம் தேதி முதல் விண்ணப்பங்களைப் பெறப் போவதாக அறிவித்திருந்த தமிழக அரசு, இப்போது ஜூலை 15 ஆம் தேதி முதல் நவம்பர் 14 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்படும் என அறிவித்துள்ளது.

அதன் பொருள் நவம்பர் மாதம் வரை மகளிர் உரிமைத் தொகை கூடுதலாக யாருக்கும் வழங்கப்படாது என்பது தான். அதன்பின் மனுக்களை ஆய்வு செய்வதாகக் காலம் தாழ்த்தி, பொங்கல் திருநாளில் தொடங்கி தேர்தலுக்கு முன் சில மாதங்களுக்கு மட்டும் உரிமைத்தொகை வழங்கி மக்களை ஏமாற்றுவது தான் அரசின் நோக்கம். இதற்கெல்லாம் தமிழக மக்கள் மயங்க மாட்டார்கள்.

மகளிர் உரிமைத் தொகை தவிர மீதமுள்ள அனைத்தும் வழக்கமான சேவைகள் தான். இந்த சேவைகள் மக்களுக்கு இயல்பாக வழங்கப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். அதற்காகத் தான் பொதுச்சேவை பெறும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றி அனைத்து சேவைகளும் மக்களுக்கு குறித்த காலத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது.

அந்த சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், தமிழக அரசால் குறிப்பிடப்படும் அனைத்து சேவைகளும் அதிக அளவாக 15 நாள்களில் கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கும். ஆனால், 'உங்களுடன் ஸ்டாலின்'திட்ட முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்க 45 நாள்கள் ஆகும். ஆண்டு முழுவதும் 15 நாள்களுக்குள் கிடைக்க வேண்டிய சேவைகளை, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை விண்ணப்பித்து 45 நாள்களில் பெறுவதற்கு ஒரு சிறப்புத் திட்டம் தேவையா? அதனால் தான் இதை ஏமாற்று வேலை என குற்றஞ் சாட்டுகிறேன்.

2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது தாங்கள் ஆட்சிக்கு வந்தால், பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்திருந்தது. அதன்பின் சட்டப்பேரவையில் ஆளுனர் ஆற்றிய உரையின் போதும், விரைவில் சேவை பெறும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்படும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், அதன்பின் 4 ஆண்டுகள் ஆகியும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

சேவை பெறும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழக அரசால் குறிப்பிடப்படும் 46 வகையான சேவைகளையும் பெறுவது மக்களின் உரிமையாகியிருக்கும். ஆனால், அதை செய்யத் தவறிவிட்ட தமிழக அரசு, இப்போது அதே சேவைகளை பெற மக்களை முகாம்களுக்கு வரவழைத்து கையேந்தி நிற்க வைக்கிறது. இதற்குப் பெயர் தான் சமூகநீதியா?

திமுக அரசு ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே மக்களுக்கு எந்த நனமையையும் செய்யாமல், விளம்பரம் மட்டுமே செய்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. சேவை பெறும் உரிமைச் சட்டத்திலும் அதையே தான் செய்து கொண்டிருக்கிறது. இப்படியே மக்களை தொடர்ந்து ஏமாற்றி விடலாம் என்று திமுக அரசு நினைத்தால், இறுதியில் ஏமாறப்போவது அதுவாகத் தான் இருக்கும். எனவே, உங்களுடன் ஸ்டாலின் என்ற பெயரில் மக்களை ஏமாற்றுவதை விடுத்து சேவை உரிமைச் சட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# வேலூர், நேதாஜி மார்க்கெட்டில் மாநகராட்சி ஆணையர் பெரிய வியாபார கடைக்காரர்கள் ஆணைக்கிணங்க ஆய்வு

வேலூர், ஜூலை.10-

வேலூர் மாவட்டம், வேலூர், நேதாஜி மார்க்கெட் அருகே, வேலூர் மாநகராட்சி ஆணையாளர் லட்சுமணன், பெரிய வியாபார கடைக்காரர்களின் ஆணைக்கிணங்க ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஆணையாளர் பொதுமக்கள் நடந்து செல்லும் வழியில் கடைகளை வைக்க கூடாது, சுகாதார பணிகளை மார்க்கெட்டில் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டார். உடன் சுகாதார அலுவலர் சிவக்குமார் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.



■ வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பெண்ணாத்தூர் காமராஜர் தெருவை சேர்ந்த முன்னாள். இந்திய அஞ்சல் துறை, நீலமேகம் கலைச்செல்வி ஆகியோரின் மகன் செல்வராஜ் பிறந்தநாள் விழா, செல்வராஜிக்கு 38ஆம் பிறந்தநாள் விழா முன்னிட்டு பெண்ணாத்தூர் பேரூராட்சி செயலாளரும், முன்னாள். பேரூராட்சி தலைவர், இந்நாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவரும், அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் சங்க செயலாளருமான பி.அருள்நாதன், பிறந்தநாள் காணும் செல்வராஜிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து இனிப்புகள் வழங்கி வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து செல்வராஜியும், அருள்நாதன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து இனிப்புகள் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வின் போது பி.ஜி.எஸ்.பன்னீர், ஆர்.ஜி.எஸ். பிரபாகர், எச்.எம்.எஸ். முபாரக் பாய், நாகராஜ் மற்றும் முத்து ஆகியோர் உடனிருந்தனர்.




# காரைக்குடி எல் ஐ சியில் காப்பீட்டுக்கழகம் ஊழியர்கள் கிளை சங்கம் சார்பில் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்

காரைக்குடி, ஜூலை.10-

சிவகங்கை மாவட்டம் காரைக் குடியில் உள்ள எல்ஐசியில் காப்பீட்டுக்கழகம் ஊழியர்கள் கிளை சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிளைச் சங்க செயலாளர் நெல்லியான் தலைமை வகித்து பேசினார். தோழர் அருள் பிரகாசம் உரையாற்றினார்.

சிஐடியு சேதுராமன் கோரிக்கை கோஷமிட்டார்.

சிஐடியு குணசேகரன் (பென்ஷன் சங்கம்) சிறப்புரையாற்றினார்

ஆறுமுகம் விளக்க உரையாற்றினார். பொதுக்குழு உறுப்பினர் துரைப்பாண்டி கலந்து கொண்டார்.

எல்ஐசி பங்கு விற்பனை முயற்சியை உடனடியாக கைவிடு, தனியார்மயத்தை எதிர்த்து மக்களின் உரிமைகளை பாதுகாப்பது, மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பணியிடங்களை உடனே நிரப்புதல்,

பழைய பென்ஷன் திட்டத்தை அனைவருக்கும் அமுல்படுத்தல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டனர். சிஐடியு மாவட்ட செயலாளர் சேதுராமன், பொருளாளர் தட்சிணாமூர்த்தி, சிஐடியு ஆட்டோ சங்கத் தலைவர் சுப்பிரமணியன், சாலை போக்குவரத்து நிர்வாகி குமார். டிஎன்எஸ்டிசி ஓய்வு பெற்ற அனப்பு ஜெகநாதன் விவசாய சங்க, தாலுகா பொறுப்பாளர் பன்னீர், விவசாய சங்க தலைவர் வெங்கடேஷ், மூத்த தோழர்கள் அருள் பிரகாசம்,சங்கரேஸ்வரன், குணசேகரன் ,சுந்தர், கோபாலகிருஷ்ணன்,

கணேசமூர்த்தி உள்பட அனைத்து கிளைச் சங்கத் தோழர்களும் கலந்து கொண்டனர். கிளைத் தலைவர் முத்துராமன் நன்றி கூறினார்.

# 7 கண்டங்களில் உள்ள உயரமான மலைகளை ஏறி சாதனை படைத்த மண்ணிவாக்கத்தை சார்ந்த முத்தமிழ் செல்வி சென்னை விமான நிலையத்தில் பேட்டி

மீனம்பாக்கம், ஜூலை.10-

விருதுநகர் மாவட்டம் ஜோக்கில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த முத்தமிழ் செல்வி. இவர் தற்போது தாம்பரம் அடுத்த மண்ணிவாக்கம் பகுதியில் குடும்பத்துடன் வசித்துவருகிறார்,

இவர் உலகில் உள்ள 7 கண்டங்களின் உயரமான மலை சிகரங்களை ஏறி சாதனை படைக்க திட்டமிட்டு பயிற்சிகளை மேற்கொண்டு வந்தார்.

இதையடுத்து கடந்த 2023ம் ஆண்டு மே மாதம் 23ந் தேதி உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்தார்.

இவருக்கு தமிழ்நாடு அரசு கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட்டது. மேலும் முத்தமிழ் செல்விக்கு அரசு சார்பில் பல்வேறு நிதி உதவிகளும் வழங்கப்பட்டது,

இதையடுத்து மீதமுள்ள 6 கண்டங்களில் உள்ள உயரமான மலை சிகரங்களை ஏறி சாதனை படைத்து வந்தார். கடந்த ஜூன் மாதம் 16ந் தேதி 7வது கண்டமாக வட அமெரிக்காவின் தெனாலி மலை சிகரத்தினை ஏறினார்.,

இதன் மூலம் மிகக் குறைந்த காலத்தில் உலகின் 7 கண்டங்களில் உள்ள சிகரங்களை ஏறிய இந்தியாவின் முதல் பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்,

அமெரிக்காவிலிருந்து முத்தமிழ் செல்வி சென்னை விமான நிலையம் வந்தார். விமான நிலையத்தில் உறவினர்கள் நண்பர்கள் பூங்கொத்து கொடுத்து சால்வை அணிவித்து வரவேற்றனர்.

பின்னர் முத்தமிழ் செல்வி செய்தியாளர்களிடம் கூறுகையில். நிறைய வலிகளை தாண்டி 7 கண்டங்களில் உள்ள மலைகளை ஏறி முடித்து உள்ளேன். இந்த சாதனையை படைக்க உதவிய முதலமைச்சர்





அப்பாவிற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். மலையேற்றம் குறித்து எதுவும் தெரியாத போது நம்பிக்கை தந்து துணை முதலமைச்சர் உதவியதால் தான் 7 கண்டங்களை ஏறி சாதனை படைக்க உதவியது. உதவியவர்கள் முலமாக வெற்றி அடைய முடிந்தது.

எவரஸ்ட் மலை ஏறும் போது எந்த வித அனுபவம் இல்லை. ஆனால் நம்பிக்கை இருந்தது. வட அமெரிக்காவில் உள்ள தெனாலி மலை சிரமமாக இருந்தது. 80 கிலோ எடையை தொடர்ந்து 8 நாட்கள் இழுத்து கொண்டு சென்றேன். மலையின் உச்சில் மூச்சு விட சிரமமாக இருந்தது. குடிக்க தண்ணீர் இல்லாமல் 16 மணி நேரம் மலை உச்சியில் இருந்தேன். என்னுடன் வந்த கேரளாவை சேர்ந்தவர் சாட்டிலைட் முலமாக கேரள அரசுக்கு தகவல் தந்தார். கேரள முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியதால் உதவிகள் கிடைத்தன.

போன்க்கை குழந்தைகள் அதிகமாக பயன்படுத்துகின்றனர். மலையேற்றம் எல்லை பாதுகாப்பு பணிக்கு உதவியாக இருக்கும். மற்ற விளையாட்டுகளுக்கு போல் மலையேற்றத்துக்கும் அங்கீகாரம் வழங்கி வேலை வாய்ப்பு உறுதி இருந்தால் நன்றாக இருக்கும்.

ஒவ்வொரு விசயத்தில் உள்ள பயத்தை போக்க வேண்டும். நம்பிக்கையுடன் இருந்தால் கற்று கொள்ள முடியும். மலையேற்ற வீரர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

# பல்லாவரத்தில் 17வார்டு பகுதியில் சுபம் நகர் பாலாஜி தெருவில் அங்கன்வாடி மையம் புதுப்பித்து திறப்பு விழா

பல்லாவரம், ஜூலை.10-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டலத்திற்கு உட்பட்ட 17வார்டு பகுதியில் சுபம் நகர் பாலாஜி தெருவில் ரூபாய் 9.50 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் புதுப்பித்து திறப்பு விழாவிற்கு வருகை தந்த காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கரு ணாநிதி எம்எல்ஏ அவர்களும் மண்டல தலைவரும் பல்லாவரம் பகுதி கழக செயலாளருமான இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்தனர் உடன் மாநகராட்சி செயற்பொறியாளர்





உதவி செயற்பொறியாளர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர் டி.எச். பிரான்சிஸ் பால் பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.சேகர், இ.கஜேந்திரன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் குடியிருப்போர் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

# கல்லூரி பின்வாயில் வழியாக வெளியேறி மருத்துவ விடுப்பில் சென்ற பேராசிரியை நிகிதா

திண்டுக்கல், ஜூலை.10-



மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார், நகை திருட்டு விசாரணையின் போது போலீஸார் தாக்கியதில் உயிரிழந்தார். இவர் மீது புகார் கொடுத்த பேராசிரியை நிகிதா, திண்டுக்கல்லில் உள்ள எம்.வி.எம். அரசு மகளிர் கல்லூரியில் தாவரவியல் துறைத் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார். அஜித்குமார் உயிரிழந்த சம்பவத்துக்குப் பிறகு கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பேராசிரியை நிகிதா கல்லூரிக்கு வரவில்லை.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் கல்லூரிக்கு சென்று பணியைத் தொடங்கினார். இதையறிந்த செய்தியாளர்கள் கல்லூரி வளாகத்தில் குவிந்தனர். உளவுத்துறை போலீஸாரும் அவரை கண்காணித்தனர். இதையடுத்து, கல்லூரி முடிந்து மாலையில் பின்வாயில் வழியாக வெளியேறினார். இந்நிலையில், அவர், ஜூலை 27ம் வரை மருத்துவ விடுப்பில் சென்று விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வருகின்ற 12.07.2025 அன்று சிவகங்கை மாவட்ட முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.10-

சிவகங்கை மாவட்டம் பொது விநியோகத் திட்டத்தில் 2025ம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் வருகின்ற 12.07.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது. இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை / நகல் அட்டை, கைப்பேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை தெரிவிக்கும் பொருட்டும் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் வட்டத்தில் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.


## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகங்கை.

**1.A NO: 5/2023 O.S NO: 11/2023**

1. ஜெயராஜ்
2. லூயிஸ்
3. ஜான்போஸ்கோ
4. அசோக்குமார்
5. ஜோசப் தனபாலன்.

(வாதிகள் தங்களுக்காகவும் ஆரோக்கியா நகர் பகுதியில் குடியிருக்கும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தானத்தில்)

எதிர்

...மனுதார்கள்/வாதிகள்

1. டேவிட்
2. வட்டாட்சியர் அவர்கள் காளையார்கோவில்
3. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சிவகங்கை
4. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் சிவகங்கை
5. தமிழக அரசு, அதன் மாவட்ட ஆட்சியர். சிவகங்கை.

...எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி மனுதார்கள்/வாதிகள் தரப்பில் இந்த நம்பர் பிரதிவாதிகள் மீது காளையார்கோவில் டவுன். ஆரோக்கியா நகரின் பொதுப்பாதையை வாதிகள் புழங்கிவருவதை இந்த நம்பர் 1ம் பிரதிவாதி ஏதும் தடையீடர் செய்யக்கூடாது என வழக்குச் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அதில் மனுதார்கள்/வாதிகள் தங்களுக்காகவும் ஆரோக்கியா நகர் பகுதியில் குடியிருக்கும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தானத்திலும் வழக்கு தாக்கல் செய்வதந்த அனுமதியளித்து உத்தரவாக வேண்டி தாக்கல் செய்த மனுவும் TA No.5/2023 என நம்பராகி அதில் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியும் வருகின்ற 18.07.2025 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி மனுதார்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனு சம்பந்தமாக யாருக்கேனும் 'சேபனை இருப்பின் அன்றையதினம் காலை 10 மணி அளவில் மேற்படி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்ரம் மனுதார்கள்/வாதிகளுக்கு சாதகமாக வழக்கு தீர்மாளிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

சொத்து விபரம்:

சிவகங்கை மாவட்டம், காளையர்கோவில் தாலுகா, சோமநாதமங்கலம் குருப், ஆரோக்கியா நகரில் சர்வே எண்கள்.201/4A.201/3D வழியாக செல்லும் நிழமேல் 20 அடி அகலம் கொண்ட தென்வடல் பொதுப்பாதை

நான்குமால்

கிழக்கே: 1ம் பிரதிவாதி டேவிட் அவர்கள் காலியிடம்,
மேற்கே: செபஸ்தி யான் அவர்கள் புஞ்சை
வடக்கே: ஆரோக்கியா நகர் குடியிருப்புகள்
தெற்கே: மதுரைதொண்டி மெயின் ரோடு.

அட்வகேட்

**B.Karthick, B.BE, LL.B., Advocates Sivagangai**


# விலையில்லா வேட்டி, சேலை திட்டத்தில் உற்பத்தி குறைப்பு: 1 லட்சம் தொழிலாளர்களுக்கு பாதிப்பா?

சென்னை, ஜூலை.10-

பொங்கல் பண்டிகையின்போது, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் விலையில்லா வேட்டி, சேலை திட்டத்தில் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளதால், 1 லட்சம் தொழிலாளர்களுக்கு 2 மாத வேலையிழப்பு ஏற்படும் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையின்போது அரசு சார்பில். வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கப்பட்டு வருகிறது. வரும் 2026 ஜனவரி பொங்கல் பண்டிகையின் போது பொதுமக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்குவதற்காக வேட்டி, சேலை உற்பத்திக்கான அரசாணை கடந்த ஏப்ரலில் வெளியானது. மேலும், வேட்டி உற்பத்திக்கான நூல் விசைத் தறியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதையடுத்து உற்பத்தி பணியை விசைத்தறி யாளர்கள் தொடங்கியுள்ளனர். சேலைக்கான நூல் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் பணி நடந்து வருகிறது. இதனிடையே, கடந்தாண்டை விட இந்தாண்டு குறைவான எண்ணிக்கையில் வேட்டி, சேலை உற்பத்திக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக விசைத்தறி உரிமையாளர்கள் கூறியதாவது: தமிழகம் முழுவதும் 248 விசைத் தறி கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம் மூலம் இலவச வேட்டி, சேலை உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், கடந்த (2024) ஆண்டு தலா 1.77 கோடி வேட்டி, சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தாண்டு பழைய இருப்புகள் போக, 1.44 கோடி வேட்டி மற்றும் 1.46 கோடி சேலை உற்பத்தி செய்யப்படும் என கடந்த ஏப்ரலில் வெளியான அரசாணையில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதனிடையே, சமீபத்தில் வெளியிடப்பட்ட உற்பத்தி ஆணையில், 1.66 ஆயிரம் சேலை மற்றும் 1.28 கோடி வேட்டி மட்டும் உற்பத்தி செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது. இது கடந்த ஆண்டு (2024) வழங்கப்பட்ட ஆர்டருடன் ஒப்பிடும்போது 76 லட்சம் சேலைகள் குறைந்துள்ளது. மேலும் ஏப்ரலில் (2025) வெளியான அரச ாணையுடன் ஒப்பிடும்போது 46 லட்சம் சேலைகள் குறைந்துள்ளது. அதேபோல, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, 48 லட்சம் வேட்டி எண்ணிக்கையும், கடந்த ஏப்ரல் மாத அரசாணையுடன் ஒப்பிடும்போது 15 லட்சம் வேட்டி உற்பத்தியும் குறைந்துள்ளது. அரசின் இந்நடவடிக்கையால் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட விசைத்தறி தொழிலாளர்கள் 2 மாத வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், விசைத்தறி சார்ந்த இதர தொழி ல்களில் ஈடுபடும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. தமிழகத்தில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைத்தறிகள் விலையில்லா வேட்டி, சேலை உற்பத்தி மூலம் பயன்பெறுவார்கள் என அரசு அறிவிப்பு வெளியிடுகிறது. ஆனால், உற்பத்தி ஆணையின் மூலம் 26 ஆயிரத்து 300 விசைத்தறிகளுக்கு மட்டுமே பணி கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அரசின் இந்த அறிவிப்பு எங்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. இவ்வாறு தெரிவித்தனர்



ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், அரியாங்கோட்டை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில்

# பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று 45 பயனாளிகளுக்கு ரூ.9.12 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு வழங்கினார்

இராமநாதபுரம், ஜூலை.10-

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் வட்டம், அரியாங் கோட்டை கிராமத்தில் வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் மக்கள் தொடர்புத்திட்ட முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள் தலைமையேற்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று 45 பயனாளிகளுக்கு ரூ.9.12 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

மக்கள் மாவட்ட நிர்வாகத்தை தேடி வந்த நிலை மாறி மாவட்ட நிர்வாகமே மக்களைத் தேடி முகாமிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க அரசு உத்தரவிட்டு ஒவ்வொரு மாதமும் தேர்வு செய்யப்பட்ட கிராமங்கள் தோறும் மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், அரியாங்கோட்டை கிராமத்தை தேர்வு செய்து சுற்று வட்டாரத்தில் உள்ள கிராம மக்களிடம் கோரிக்கைகள் குறித்து 112 மனுக்கள் பெறப்பட்டு அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்திடும் வகையில் தற்பொழுது 45 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதேபோல் இன்று 96 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் பொதுமக்களின் மனுக்களுக்கு தீர்வு கிடைக்கச் செய்வது. அதேபோல் அரசின் நலத்திட்டங்கள் தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்கும் சென்றடையச் செய்வது என்பதேயாகும். அந்த வகையில் இம்முகாமில் மாவட்ட நிர்வாகத்தில் உள்ள அனைத்துத்துறை தலைமை அலுவலர்கள் மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க



இருப்பதுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி செயல்பட உத்தரவிட்டுள்ளார்கள். பொதுமக்களாகிய நீங்கள் தங்கள் பகுதியில் முகாம்கள் நடைபெறும் பொழுது தவறாமல் கலந்து கொண்டு உங்கள் ஊராட்சியின் வளர்ச்சிக்கும் உங்கள் வளர்ச்சிக்கும் தேவையான திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடாந்;து மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு இலவச தையல் இயந்திரம் ரூ.6,690 மதிப்பீட்டிலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு ஈமச்சடங்கு நிவாரணத்தொகை ரூ.17,000 மதிப்பீட்டிலும் மற்றும் 01 பயனாளிக்கு நலவாரிய கல்வி உதவித்தொகை ரூ.3,000 மதிப்பீட்டிலும் என மொத்தம் 02 பயனாளிகளுக்கு ரூ.20,000 மதிப்பீட்டிலும், கூட்டுறவுத்துறையின் மூலம் 13 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கடன் ரூ.8,73,600 மதிப்பீட்டிலும், வேளாண்மைத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு KAVIADP ரூ.2,075 மதிப்பீட்டிலும், 10 பயனாளிகளுக்கு MINIKIT Distribution ரூ.5,080 மதிப்பீட்டிலும், 05 பயனாளிகளுக்கு SADS (ஜிப்சம்) ரூ.2,705 மதிப்பீட்டிலும், 05 பயனாளிகளுக்கு KAVIADP ரூ.2,250 மதிப்பீட்டிலும், 02 பயனாளிகளுக்கு FNS Rice ரூ.290 மதிப்பீட்டிலும் என மொத்தம் 23 பயனாளிகளுக்கு ரூ.8,86,000 மதிப்பீட்டிலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் 06 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள் என மொத்தம் 45 பயனாளிகளுக்கு ரூ.9,12,690 மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வருவாய்த்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, குழந்தைகள் பாதுகாப்பு நலத்துறை, மகளிர் திட்டம், பொதுசுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மாவட்ட பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை, ஆகிய துறைகள் அரசின் திட்டங்கள் குறித்த சாதனை விளக்க கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டதுடன், பொதுமக்களும் அந்த அரங்குகளை பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு தேவைகேற்ப திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டுமென மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 'உங்களுடன் ஸ்டாலின்'' சிறப்பு திட்டம் துவக்கப்பட்டு ஜூலை 15 முதல் சிறப்பு முகாம்கள் அனைத்து பகுதிகளிலும் நடைபெறவுள்ளன. இம்முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்கு என தனியே விண்ணப்பம் வழங்கி பதிவு செய்து வாங்கப்படுகிறது. இதுபோல் ஒவ்வொரு கோரிக்கைக்கும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்து தரப்படும். இத்தகைய முகாம் தங்கள் பகுதிகளில் நடைபெறும் பொழுது தவறாமல் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைகள் குறித்து விண்ணப்பித்து பயன்பெற வேண்டுமென மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜமனோகரன் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.பாஸ்கரமணியன் அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள், ஆர்.எஸ். மங்கலம் வட்டாட்சியர் திரு.அமர்நாத் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## நீலகிரியில் தொடரும் மழை பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம்

ஊட்டி, ஜூலை.10-

நீலகிரியில் மழை பெய்து வரும் நிலையில் அனைத்து பகுதிகளிலும் பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன் மாதம் துவங்கி இரு மாதங்கள் தென்மேற்கு பருவமழை பெய்யும். அதேபோல், அக்டோபர் மாதம் துவங்கி இரு மாதங்கள் வடகிழக்கு பருவமழை பெய்யும்.

இச்சமயங்களில் நீலகிரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் விவசாயம் மேற்கொள்வது வாடிக்கை. அதேசமயம், டிசம்பர் மாதம் முதல் மே மாதம் வரை 6 மாதங்கள் நீலகிரியில் மழை குறைந்து காணப்படும். சில சமயங்களில் இந்த 6 மாதங்களில் மழை துளிகள் கூட விழாது.

இதனால், இச்சமயங்களில் தாழ்வான பகுதிகள் மற்றும் நீர் நிலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மட்டுமே விவசாயிகள் மலை காய்கறிகளை பயிரிடுவார்கள்.

தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மலைப்பாங்கான பகுதிகளில் விவசாயம் மேற்கொள்வதை தவிர்ப்பது வழக்கம். ஜூன் மாதத்திற்கு பின்னரே விவசாயத்தை துவக்குவார்கள். ஆனால், இம்முறை கடந்த மாதம் பெரும்பலான நாட்கள் நீலகிரியில் மழை கொட்டித் தீர்த்தது.

தொடர் மழை காரணமாக அனைத்து பகுதிகளிலும் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில், காய்கறி விவசாயிகள் பயிர் செய்ய துவங்கி விட்டனர். குறிப்பாக, இத்தலார், நஞ்சநாடு, எமரால்டு, முத்தோரை பாலாடா போன்ற பகுதிகளில் கேரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட், முட்டைகோஸ், பூண்டு போன்ற பயிர்கள் விவசாயிகள் பயிர் செய்ய துவங்கியுள்ளனர்.



## 4 விரைவு ரயில்களில் முன்பதிவு இல்லாத பெட்டிகளின் எண்ணிக்கை 4 ஆக அதிகரிப்பு

சென்னை, ஜூலை.10-

தெற்கு ரயில்வேயில் 4 விரைவு ரயில்களில் முன்பதிவு இல்லாத பெட்டிகள் 4 ஆக அதிகரிக்கப்பட உள்ளது. ரயில்வே வாரியத்தின் உத்தரவுப்படி, முன்பதிவு இல்லாத பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு, விரைவு ரயில்களில் முன்பதிவு இல்லாத பெட்டிகள் கூடுதலாக இணைத்து இயக்கப்படுகின்றன.

அந்த வகையில், மேலும் 4 விரைவு ரயில்களில் தற்போதுள்ள 2 முன்பதிவு இல்லாத பெட்டிகள் 4 ஆக அதிகரித்து இயக்கப்பட உள்ளது. மும்பை சி.எஸ்.எம்.டி. எழும்பூர் விரைவு ரயிலில் (2215722158) இரு மார்க்கத்திலும் வரும் செப்.5ம் தேதிமுதல் முன்பதிவு இல்லாத பெட்டிகள் 4 ஆக அதிகரித்து இயக்கப்படும். எழும்பூர் சேலம் விரைவு ரயிலில் (2215422153) இரு மார்க்கத்திலும், வரும் செப்.6ம் தேதிமுதல் முன்பதிவு இல்லாத பெட்டிகள் 4 ஆக அதிகரித்து இயக்கப்படும்.

தாதர் புதுச்சேரி விரைவு ரயிலில் (1100511006) வரும் செப்.7ம் தேதியிலிருந்தும், திருநெல்வேலி தாதர் விரைவு ரயிலில் (1102111022) வரும் செப்.9ம் தேதியிலிருந்தும் முன்பதிவு இல்லாத பெட்டிகள் 4 ஆக அதிகரித்து இயக்கப்படும். இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## புதுச்சத்திரம் வட்டாரத்தில் சொட்டுநீர் பாசனத்துடன் தானியங்கி கருவி அமைப்பு: துணை இயக்குனர் நேரில் ஆய்வு

சேந்தமங்கலம், ஜூலை.10-

புதுச்சத்திரம் வட்டாரத்தில் சொட்டு நீர் பாசனத்துடன் கூடிய தானியங்கி கருவி அமைக்கப்பட்டுள்ளது.

இதனை தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். புதுச்சத்திரம் வட்டாரம், நவணி கிராமத்தில் விவசாயி சுப்ரமணியம் என்பவருக்கு சொந்தமான 1.16 எக்டர் விவசாய நிலத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலமாக, நுண்ணீர் பாசனம் திட்டத்துடன் கருவி அமைக்கப்பட்டுள்ளது.

இதனை தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் புவனேஸ்வரி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:

இந்த திட்டத்தின் கீழ், தானியங்கி கருவி அமைப்பதற்கு சிறு குறு விவசாயிகளுக்கு, ஒரு எக்டருக்கு ரூ.22ஆயிரம் மானியமும், இதர விவசாயிகளுக்கு ரூ.18ஆயிரம் மானியமும் வழங்கப்படுகிறது. விவசாயி சுப்பிரமணியத்திற்கு 1.16 எக்டர் பரப்பிற்கு ரூ.24 ஆயிரம் மானியமாக வழங்க விண்ணப்பம் பெறப்பட்டு, தானியங்கி கருவி நிறுவப்பட்டுள்ளது.

தானியங்கி சொட்டு நீர் பாய்ச்சுவது மிகவும் எளிமையாகவும், வேலை ஆட்கள் பற்றாக்குறையாக உள்ள தருணத்தில், மிகவும் உபயோகமாக இருக்கும். தண்ணீரின் பயன்பாடும் மிகவும் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

கைப்பேசி மூலமாக எந்த இடத்திலும் இருந்து இயக்குவதற்கு மிகவும் எளிமையாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின் போது, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கவின், அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## திருவையாறு அருகே வாழை சாகுபடிக்கு இயற்கை உரம் தயாரிப்பு



தஞ்சாவூர், ஜூலை.10-

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அடுத்த வடுகக்குடி பகுதியில் வாழை விவசாயத்திற்காக ஆட்டு சாணம் மூலம் இயற்கை உரம் தயாரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக தென்னை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால், வாழை அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது.

குறிப்பாக காவிரி கரையோர பகுதிகளில் தான் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. மாவட்டத்தில் உள்ள திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம், பாபநாசம், அய்யம்பேட்டை பகுதிகளில் அதிக அளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழை விவசாயம் முக்கியமானது. காவிரி டெல்டா பகுதியில் பரவலாக வாழை பயிரிடப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 3.39 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது.

அதில் 2.69 லட்சம் ஹெக்டேரில் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. தோட்டக்கலை சாகுபடி பரப்பளவு 45,330 ஹெக்டேர் ஆகும். இதில் பழங்கள் சுமார் 4,690 ஹெக்டேர்களில் பயிரிடப்படுகின்றன. 11 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் வாழை சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, பொங்கல் பண்டிகைக்காக வாழைத்தார்களை விவசாயிகள் வெளிநாடு களுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த பகுதிகளில் வாழை இலை மற்றும் வாழை நார் பொருட்கள் தயாரிப்பின் மூலம் ஏராளமானோர் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

தஞ்சையை சுற்றியுள்ள திருவையாறு, வடுககுடி அம்மன்பேட்டை, திருக்காட்டுப்பள்ளி, மேலத்திருப்பூந்துருத்தி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வாழை இலைகள் சென்னையில் உள்ள ஓட்டல்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இப்படி அனுப்பி வைக்கப்படும் இலைகளில் 2 வகைகள் உள்ளன. நுனி இலை, ஏடு என 2 வகைகளாக ஓட்டலுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதேபோல் வாழை நார்களும் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது திருவையாறு சுற்றுவட்டார பகுதிகளில் வாழை கன்றுகள் நடும் பணி தொடங்கும் நிலையில் உள்ளது. இதற்காக வாழை விவசாயிகள் தங்கள் பகுதியில் கிடைக்கும் ஆட்டு சாணங்களை விலைக்கு வாங்கி அதனை பவுடராக நுணுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து வாழை விவசாயி மதியழகன் கூறுகையில், இன்னும் சில தினங்களில் புதிதாக வாழைக்கன்றுகள் நடும் பண்ணி தொடங்க உள்ளோம். அதற்கான அனைத்து பணிகளிலும் தற்போது ஈடுபட்டு வருகிறோம்.

காவிரி டெல்டா பகுதியான திருவையாறு திருக்காட்டுப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் தற்போது விவசாய பணிக்காக தண்ணீர் திறந்து முழுமையாக சென்று வருகிறது. அதனை பயன்படுத்தி வாழை சாகுபடியில் ஈடுபட உள்ளோம். நாங்கள் வாழை சாகுபடிக்கு செயற்கை உரங்களை பயன்படுத்துவதில்லை.

முழுமையாக இயற்கை உரத்தை மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். இயற்கை உரத்திற்காக எங்கள் பகுதியில் கிடைக்கும் ஆட்டு சாணத்தை பெற்று அதனை பவுடராக நுணுக்கி சாலையில் உலர்த்தி வருகிறோம்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு திருவையாறு பகுதியில் இருந்துதான் வாழையிலை வாழைப்பழம் வாழைநார் வாழைப்பூ ஆகிய அனைத்தும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாங்கள் உற்பத்தி செய்யும் வாழை சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களும் தரமானதாக இருக்கும். இதற்குக் காரணம் இயற்கை உரம் தான். இவ்வாறு அவர் கூறினார்.

## புதன்சந்தையில் ரூ.2.50கோடிக்கு மாடுகள் விற்பனை



சேந்தமங்கலம், ஜூலை.10-

புதுச்சத்திரம் புதன்சந்தையில் மாடுகள் வரத்து அதிகரித்து விலை குறைந்து வருவதால் ரூ.2.50 கோடிக்கு வர்த்தகம் நடந்தது. புதுச்சத்திரம் ஒன்றியம், புதன்சந்தையில் வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை மாட்டுச்சந்தை கூடுவது வழக்கம்.

திங்கட்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை மதியம்வரை சந்தை நடைபெறும். சந்தையில் மாடுகளை வாங்க விற்க ஆந்திரா, கர்நாடகம், கேரளா, கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி, திண்டுக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் மற்றும் உள்ளூர் விவசாயிகள், வியாபாரிகள் வருவர்.

கோடிக்கணக்கில் வர்த்தகம் நடைபெறும். நேற்று கூடிய மாட்டு சந்தையில் ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில் இருந்து பால்மாடுகள், இறைச்சி மாடுகள், காளை மாடுகள் என அதிகளவில் மாடுகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தமிழக உள் மாவட்டங்களில் மாடுகளை வாங்க குறைவான வியாபாரிகள் வந்திருந்தனர். இதனால் வெளி மாநிலங்களுக்கு மாடுகள் விற்பனை குறைந்து போனது.

கர்நாடகா, கேரளாவில் தொடர் மழையின் காரணமாக அங்கிருந்து குறைவான வியாபாரிகள் மாடுகளை வாங்க வந்திருந்தனர். இதனால் மாடுகளின் விலை குறைந்தது. இறைச்சி மாடுகள் ரூ.25 ஆயிரத்திற்கும், கறவை மாடுகள் ரூ.45 ஆயிரத்திற்கும், கன்று குட்டிகள் ரூ.15 ஆயிரத்திற்கு விற்பனையானது. மொத்தம் ரூ.2.50 கோடிக்கு வர்த்தகம் நடந்தது.






■ இந்தோ திபெத் பார்டர் காவல்துறையினர் தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து கன்னியாகுமரி வரை சைக்கிள் ரிலே பயணம் மேற்கொண்டனர் நேற்று மாலை 3 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகையின் போது முன்னாள் துணை ராணுவ படை மாவட்ட செயலாளர் மணிமாறன் சைக்கிள் ரிலே வருபவர்களை வரவேற்று பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கினார் அச்சமயம் இந்தோ திபத் பார்டர் காவல்துறையினர் உயர் அதிகாரிகள் மற்றும் முன்னாள் துணை இராணுவப் படை நல சங்க வீரர்கள் முருகையா, மோகன், ராம ஜெயம், முத்து தம்பி, சுந்தரமூர்த்தி, சரவணபாண்டியன், மேகநாதன், சிவக்குமார், மற்றும் பலர் கலந்து கொண்டு ரிலேயில் வருபவர்களை வரவேற்று சிற்றுண்டிகொடுத்து நினைவுப் பரிசு வழங்கி வழி அனுப்பி வைத்தனர்







## காட்பாடி தாலுகா, அரும்பருத்தி ஊராட்சி எல்லை பாலாற்றில் ரூ.24.82 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட தடுப்பணை அர்ப்பணிப்பு

### நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று சிறப்புரை

வேலூர், ஜூலை.10-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, அரும்பருத்தி கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே ரூ.24.82 கோடி மதிப்பில் கட்டப்பட்ட தரைகீழ் தடுப்பணையை நீர்வளத்துறை அமைச்சர் சிறப்பு பூஜைகள் செய்து பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தனர். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வே.வேல்முருகன், மாநகராட்சி துணைமேயர் மா.சுனில்குமார், காட்பாடி ஒன்றிய குழு துணை தலைவர் எஸ்.சரவணன், மேல்பாலாறு வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் சி.பொதுபணிதிலகம், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், செயற்பொறியாளர் இரா. வெங்கடேஷ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சுலோக்சனா கிருபாகரன், அரும்பருத்தி ஊராட்சி மன்ற தலைவர் கீதா கோட்டையன், ஊராட்சி மன்ற துணை தலைவர் வி.கோவிந்தசாமி, அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி வார்டு எண் 18,19,20 ஆகிய பகுதிகளில் 1000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். சாக்கடை விரிவாக்கம் செய்யும் பணி தற்போது நடைபெற உள்ள சூழலில் கழிவுநீர் செல்ல வழி இல்லாததால் குடியிருப்புகளில் இருந்து வெளிவரும் கழிவு நீர் தேங்கி நின்று கடும் துர்நாற்றம் வீசி வருவதோடு, நோய் தொற்று பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிவாசிகள் வேதனை தெரிவித்துள்ளனர். தேங்கி நிற்கும் தண்ணீரை மானாமதுரை நகராட்சி நிர்வாகம் அகற்ற வேண்டும் கோரிக்கை எழுந்துள்ளது

## வேலூரில், கிரிக்கெட் சங்கம் சார்பில் வரும் 12ஆம் தேதி பாகாயம் தந்தை பெரியார் பாலிடெக்னிக் விளையாட்டு மைதானத்தில், கிரிக்கெட் வீரர்கள் தேர்வு

### 25 வயதுக்குள் உள்ளவர்கள் பங்கேற்கலாம்: நறுவீ நிறுவனத் தலைவரும், கிரிக்கெட் சங்க தலைவருமான ஜி.வி.சம்பத் அழைப்பு

வேலூர் ஜூலை.10-

வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்டங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியை மாநில கிரிக்கெட் சங்கம் நடத்த உள்ளது. இப்போட்டிகளில் வேலூர் மாவட்டம் சார்பில் பங்கேற்க உள்ள வீரர்களை தேர்வு செய்வதற்கான நிகழ்வு இம்மாதம் 12ம் தேதி (12.07.25) காலை 11 மணிக்கு வேலூர் பாகாயம் பகுதியில் இயங்கி வரும் தந்தை பெரியார் பல்நோக்கு தொழில்நுட்ப கல்லூரி (தந்தை பெரியார் பாலிடெக்னிக் கல்லூரி) விளையாட்டு அரங்கில்



நடைபெற உள்ளதாக வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவரும், வேலூர் நறுவீ மருத்துவமனை தலைவருமான முனைவர். ஜி.வி.சம்பத் தெரிவித்துள்ளார். இந்த தேர்வில் பங்கேற்க 01.09.2000 தேதியிலோ, அதற்கு பிறகு பிறந்தவர்களாக இருக்க வேண்டும். தேர்வுக்கு வருபவர்கள் ஆதார் அட்டை மற்றும் கிரிக்கெட் சீருடையில் வரவேண்டும் என தெரிவித்துள்ளார். இது சம்மந்தமாக மேலும் தகவல் அறிய வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க கௌரவ சங்க செயலாளர் எஸ். ஸ்ரீதரனை மொபைல் எண்: 70105 94657 மூலமாக தொடர்பு கொண்டு விவரங்கள் அறியலாம் என என தெரிவித்துள்ளனர்.






## கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் அறிமுக விழா

தென்காசி, ஜூலை. 10-

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடையநல்லூர், நாட்டு நலப்பணித்திட்டம் அணி:007 சார்பாக 7.7.2025 திங்கள் அன்று தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின் படி முதலாமாண்டு மாணவர்களுக்கான புத்தாக்க பயிற்சி வகுப்பு மற்றும் அறிமுக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் கல்லூரி பின் சிறப்பு செயல்முறைகள் என்ற தலைப்பில் நாட்டுநலப்பணித்திட்டம், இளையோர் செஞ்சிலுவை சங்கம், பெண்கள் மேம்பாடு, திறன் மேம்பாடு மற்றும் பிற மாணவ சேவை அமைப்புகள் போன்ற சிறப்பு துணைப் பாடத்திட்டங்கள் குறித்து கல்லூரி முதல்வர் ரா.ஜெயா தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவில் ஆங்கிலத்துறை தலைவர் முனைவர். ம. இராம்சங்கர் முன்னிலை வகித்தார்கள்.

மகளிர் மேம்பாடு, போட்டித் தேர்வுகள் மற்றும் மாணவர் சேவை மன்றங்கள் மூலம் தங்கள் ஆளுமைத்திறனை வளர்ப்பது குறித்து தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரம்யா மாணவர்களுடன் கலந்துரையாடல் மற்றும் மாணவமாணவிகளுக்கு நல ஆலோசனை குறித்து பெண்கள் மற்றும் குழந்தைகள் விசாரனை பிரிவு காவல் உதவி ஆய்வாளர் சாந்தி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு மாணவ மாணவிகள் பயன்பெறும் வண்ணம் கருத்துரு வழங்கினார்கள். முன்னதாக நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் ஆ.பால்மகேஷ் நிகழ்ச்சி. யில் கலந்து கொண்ட முதல்வர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்று அறிமுக உரை வழங்கி னார்கள். விழாவில் கல்லூரியின் மாணவ சேவை அமைப்புகள் குறித்து மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் காணொளியைக் கொண்டும் நாட்டுந லப்பணி த்திட்டத்தின் சிறந்த சேவைக்கான மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் விருதுபெற்ற பேராசிரியர் ஆறுமுகம், இளைஞர் செஞ்சிலுவை சங்க அலுவலர் முனைவர் லாரன்ஸ் மற்றும் சிறந்த மாணவ தொண்டர் விருது பெற்ற முன்னாள் மாணவி செல்வி.அழகுதுரைச்சி ஆகியோர்களைக்கெண்டும் கருத்துரைகள் வழங்கப்பட்ன, மேலும் கல்லூரி அளவில் 2024-2025ம் ஆண்டுக்கான தேசிய, மாநில அளவிலான ஒருங்கி னைப்பு முகாம். தேசிய குடியரசுதின அணிவகுப்பு முகாம். கருத்தரங்கங்கள், ம.சு.பல்கலைக்கழக விருதுபெற்றவர்கள் என நாட்டுநலப்பணித் திட்டதிற்கு சிறந்த பங்களிப்பை செய்த மாணவமாணவிகளுக்கு கல்லூரி முதல்வர் ஜெயா பரிசுகள் வழங்கி பாராட்டினார். இறுதியில் வணிகவியல் துறைத் தலைவர் முத்துபிராகாஸ் நன்றி கூறினர். வணிகவியல் துறை மாணவர் இளவரசன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார் இதில் அனைத்துதுறை தலைவர்கள். பேராசிசரியர்கள். அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். இதற்கு நாட்டு நல பணித்திட்ட அலுவலர் மற்றும் வணிகநிர் வாகவியல் துறைத் தலைவர் முனைவர். பால் மகேஷ் வணிகவியல் துறைத் தலைவர் முத்துபிராகாஸ், கணிணிதுறைத்தலைவர் முனைவர். முருகன் கணிதவியல் துறை தலைவர் மரகதகோமதி. தமிழ்துறைத்தலைவர் முனைவர் கிருத்திகா மற்றும் பேராசிரியர்களுடன் இணைந்து ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.





## திருப்பூர், தெற்கு நெடுஞ்சாலைத்துறை. பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது

திருப்பூர், ஜூலை.10-

திருப்பூர் மாவட்டம். தெற்கு நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பு வேலைகளை செய்யுமாறு கோட்டப் பொறியாளர், ரத்தினசாமி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார். அதன்படி உதவி கோட்ட பொறியாளர், சுரேஷ் மற்றும் பொறியாளர், கிஷோர் ராமன் இவர்களது மேற்பார்வையில் திருப்பூர் நெடுஞ்சாலை துறையின் பராமரிப்பில் உள்ள முக்கிய நெடுஞ்சாலை யான திருப்பூர் பல்லடம் சாலையில் மைய தடுப்பான்கள் வைக்கப்பட்டுள்ளது அவ்வாறு வைக்கப்பட்ட தடுப்பான்கள் நீண்ட காலமாக உள்ளதால் பல தடுப்பான்கள் சிதில் அடைந்து கம்பிகள் வெளியே தெரிய வருகிறது. இதனை சீர்படுத்தும் வேலையில். நெடுஞ்சாலைத்துறையினர். தற்போது, சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் திருப்பூர் பழைய பேருந்து நிலையம் முதல் அருள் புறம் வரை உள்ள மைய தடுப்பான்கள் வர்ணம் பொலிவிழந்து காணப்பட்டன எனவே மைய தடுப்பான்களுக்கு கருப்பு, வெள்ளை, புதிய வர்ணங்களை பூசும் வேலைகள் நடைபெற்று வருகிறது. இந்த வேலைகளை மிகச் சிறப்பாக செய்ய பொறியாளர் கிஷோர் ராமன் முன் நின்று பார்வையிட்டு வருகிறார். மேலும் அப்பகுதி மக்கள் அனைவரும் சிதிலடைந்த மற்றும் வர்ணம் பொலிவிழந்ததால் இரவு நேரத்தில் வாகனங்களில் செல்லும்போது வர்ணங்கள் தெரியவில்லை தற்போது வண்ணங்கள் பூசி வேலைகளை செய்யும் அதிகாரிகளுக்கு பொதுமக்கள் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்தனர்.

## செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில் புதிய கேட் கீப்பராக ஆனந்தராஜ் நியமனம்

கடலூர், ஜூலை.10-

செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில் புதிய கேட் கீப்பராக ஆனந்தராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். ரயில்வே விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும் என தெற்கு ரயில்வே அறிவுறுத்தியதாக ஆனந்தராஜ் தகவல் தெரிவித்துள்ளார். மத்திய பிரதேசத்தை சேர்ந்தவரை தமிழ்நாட்டில் நியமித்தது சர்ச்சையான நிலையில் தமிழர் நியமிக்கப்பட்டார்.








## மத்திய அரசை கண்டித்து மானாமதுரை ரயில்வே நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்

மானாமதுரை, ஜூலை.10-

SRMU பொது செயலாளர் கண்ணையா ஆணைப்படியும், AIRF ன் முடிவின் படியும், ஜூலை 9 ம் தேதி (புதன்கிழமை) நேற்று மத்திய அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கைக்கு எதிரான HMS உட்பட்டு அனைத்து மத்திய சங்கங்களின் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக கோட்ட செயலாளர் J.M.ரபீக் DS/MDU மற்றும் கோட்ட தலைவர் C செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி மானாமதுரை கிளையின் சார்பாக மானாமதுரை சந்திப்பு இரயில் நிலையம் முன்பு நேற்று காலை 08.00 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் கிளைத் தலைவர் சிவக்குமார் தலைமை வைத்தார், பாலமுருகன் கிளைச் செயலாளர் முன்னிலை வகித்தார், கிளை பொறுப்பாளர் P சீதாராமன் ADS/MDU கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மகளிர் அணி, இளைஞர் அணி, கேட்டகிரி கவுன்சில் நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் அனைத்து சகோதர, சகோதரிகளும் திரளாக கலந்து கொண்டனர்..

## குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவர் டாக்டர் ரமேஷ்பாபுஜி பிறந்தநாள் விழா: கேக்வெட்டி, நலதிட்ட உதவி வழங்கி அன்னதானம்

குரோம்பேட்டை, ஜூலை.10-

செங்கல்பட்டு மாவட்டம் குரோபேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவர் டாக்டர் ரமேஷ்பாபுஜி அவர்களின் பிறந்தநாள் விழா மாநில அமைப்பு செயலாளர் ரமேஷ் தலைமையில் இந்து திருக்கோயில் கூட்டமைப்பின் மாநில இணை ஒருங்கினைப்பாளர் கோபி சந்த், செங்கல்பட்டு மாவட்டம் ஆன்மிக பிரிவு தலைவி ஆர்த்தி முன்னிலையில் பேண்டு வாத்தியங்கள் முழங்க கேக்வெட்டி மலர் மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்து வெகு விமர்சியாக கொண்டாடினர். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இந்து புரட்சி முன்னனி நிறுவன தலைவர் சந்திரகுமார் கலந்து கொண்டு வாழ்த்து





தெரிவித்தார் இதனை தொடர்ந்து குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகே ஏழை, எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளான வேட்டி, சேலைகள் வழங்கி 500க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினர் இதில் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் வேலு, பொது செயலாளர் வேலுசாமி மற்றும் திராவிட மக்கள் கட்சி நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161